# சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.சே.மணிவண்ணன். எம்.ஏ.பி.எட்.,

ப.மு.எண். 1500/அ1/2022 நாள்.25/02/2022

---

பொருள்: பணிவரன்முறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை நியமனம் – புதுக்கோட்டை மாவட்டம் – அரிமளம் ஒன்றியம், சித்திரம்பூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி - தலைமையாசிரியர் திரு.ரா.காளியப்பன் என்பார் 03/04/2004 அன்று இயற்கை எய்தியது – அன்னாரின் வாரிசுதாரர் திரு.கா.வீரமணி - கல்லல் வட்டாரக்கல்வி அலுவலகம் - 07/06/2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண் 48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை (க்யூ1) நாள் 26/02/2021.
2. அரசாணை (நிலை) எண் 101 பள்ளிக்கல்வித்துறை நாள் 18/05/2018.
3. சென்னை – 6 பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.21925/ஜே/இ4/2021 நாள் 09/04/2021.
4. தேவகோட்டை மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 3610/அ1/2017 நாள் 05/06/2017.
5. திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.806/அ1/2022 நாள்.25/02/2022.

********

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஒன்றியம், சித்திரம்பூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணிபுரிந்து, பணிக்காலத்தில் 03/04/2004 அன்று இயற்கை எய்திய திரு.ரா.காளியப்பன் என்பாரின் வரிசுதாரர் திரு.கா.வீரமணி என்பவருக்கு பார்வை(4)-இல் காணும் தேவகோட்டை மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி கல்லல் வட்டாரக்கல்வி அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டு பணிபுரிந்துவரும் திரு.கா.வீரமணி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 07/06/2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யகோரிய கருத்துரு பார்வை (5)-இல் காணும் திருப்பத்தூர் மாவட்டக்கல்வி அலுவலர் கடித வாயிலாக பெறப்பட்டுள்ளது.

பார்வை (1)-இல் காணும் அரசாணையின்படி 02/02/2016 முதல் 31/12/2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rule) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறைப்படுத்திட தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை (2)-இல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும் மற்றும் பார்வை (3)-இல் காணும் சென்னை-6, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் திரு.கா.வீரரமணி என்பாருக்கு கல்லல் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு அன்னார் பணியேற்ற நாளான 07/06/2017 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனை</u>

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் பொருட்டு, நடைமுறையில் உள்ள சரிபார்ப்பு பட்டியலின்படி கருத்துரு மற்றும் இந்த பணிவரன்முறை ஆணை நகல் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை பதிவு செய்யப்பட்ட பக்க நகல் ஆகியவற்றை உடன் அனுப்ப வேண்டும். தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறப்பட்ட பின்னர்தான் இவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் தகுதிகாண்பருவம் முடித்த பிறகே தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.
3. தகுதிகாண்பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

பணிவரன்முறை செய்த விபரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கல்லல் வட்டாரக்கல்வி அலுவலருக்கு தெரிவிக்கலாகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்,
சிவகங்கை
23/12/22

இணைப்பு- பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றுகள்.

பெறுநர்:

திரு.கா.வீரரமணி,
இளநிலை உதவியாளர்,
வட்டாரக்கல்வி அலுவலகம்
கல்லல். (வட்டாரக்கல்வி அலுவலர் வழியாக)

நகல் :

1. வட்டாரக்கல்வி அலுவலர்,
கல்லல்.
2. மாவட்டக்கல்வி அலுவலர்,
திருப்பத்தூர்.